## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.342/2024

நாள்: 27.07.2026

வா.சா. 1 – ராஜராஜசோழன் (எ) பிரசாத்

2026–ம் ஆண்டு ஜுலை 27–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் B.Com படித்துள்ளேன். எனது தந்தை வழி தாத்தா பெயர் ராஜமாணிக்கம் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு எனது தந்தையும், பிரதிவாதியும் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். இவர்களை தவிர முத்துலெட்சுமி, சாரதாம்பாள், அஞ்சலை, சாவித்திரி என்ற 4 பெண் வாரிகள் என்றால் சரிதான். என் தந்தை திருசங்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே வேலை நிமித்தமாக பெங்களூருக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். கடந்த 50 ஆண்டுகளாக என் தந்தை அவரது குடும்பத்துடன் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய ஆதார் மற்றும் பிறப்பு சான்றிதழ் பெங்களூர் முகவரியில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகள் பெரியகிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ளது. தாவா 2 முதல் 4 மற்றும் 6 அயிட்ட சொத்துகளை என்னுடைய தாத்தா ராஜமாணிக்கம் கடந்த 24.10.1977–ல் அந்தோணிஜோசப் வகையறாவிடம் இருந்து கிரயம் வாங்கிய சொத்துகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 7 வது அயிட்ட சொத்தை என்னுடைய தாத்தா ராஜமாணிக்கம் கடந்த 03.12.1979 மற்றும் 30.10.1980–ல் சங்கரன் வகையறாவிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். கிரயம் வாங்குவதற்கு எனது தந்தை பணம் கொடுத்ததாக என்னிடம்

சொன்னார். எனது தந்தை பணம் கொடுத்தற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. என் தந்தை 50 ஆண்டுகளுக்கு முன்பே பெங்களூருக்கு சென்று அங்கேயே தங்கிவிட்டார் என்றாலும் ஊருக்கு வருவதில்லை என்றாலும் சரியல்ல. சொத்துகளை கிரயம் வாங்க என் தந்தை என் தாத்தாவிற்கு பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை பணம் கொடுத்திருந்தால் அவர் பெயரிலேயே சொத்துகளை வாங்கியிருப்பார் என்றால் சரியல்ல. என் தந்தை பெங்களூருக்கு சென்ற பிறகு என் தாத்தா மற்றும் பிரதிவாதி மற்றும் அவருடைய சகோதரிகள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்றால் தெரியாது. என் தாத்தா ராஜமாணிக்கத்தையும் அவரின் மகள்களையும் பிரதிவாதி தான் பராமரித்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு என் அப்பாவுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது என்றும் அந்த திருமணத்தை என் தந்தை தான் செய்துவைத்தார் என்றும் என் தந்தை என்னிடம் சொன்னார். என் தந்தை என் தாத்தாவிடம் சொல்லாமல் பெங்களூருக்கு சென்றுவிட்டார் என்றாலும் சுமார் 10 ஆண்டுகள் கழித்து தான் பெங்களூருவில் இருக்கும் விவரத்தை என் தாத்தாவிடம் என் தந்தை சொன்னார் என்றாலும் சரியல்ல. என் தந்தை 10 ஆண்டுகள் காணாமல் இருந்த காரணத்தால் இளைய மகனான பிரதிவாதிக்கு என் தாத்தா திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கு என் தந்தை திருமணம் செய்துவைக்கவில்லை என்றாலும் திருமணத்திற்கு என் தந்தை வரவில்லை என்றாலும் சரியல்ல. என் தந்தை காணாமல் சென்ற காலக்கட்டத்தில் தாவா 2 முதல் 4 மற்றும் 6, 7 ஆகிய அயிட்ட சொத்துகள் பிரதிவாதியின் சொந்த வருமானத்தால் அவருடைய தந்தை பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்துகள் என்றாலும் கிரய காலம் முதல் மேற்படி சொத்துகள் பிரதிவாதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றால்

சரியல்ல. மேற்படி சொத்துகளில் வாதிகளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துகளை நாங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.